தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

சித்திரை 24, சித்ரபானு-திருவள்ளுவர் ஆண்டு 2033
2002 மே 7, செவ்வாய்க்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"ஆள்வினையும் ஆன்ற அறிவும் எனஇரண்டின்
நீள்வினையால் நீளும் குடி."

ஆழ்ந்த அறிவும், விடாமுயற்சியும் கொண்ட ஒருவர் அயராது பாடுபடுகிறபோது, அவரைச் சேர்ந்துள்ள குடிமக்களின் பெருமை தானே உயர்கிறது.

1. வினாக்கள் - விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள். வினா எண் 290, திரு. ப. அரசன், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்.*

290—

நீர்ப்பாசனம்

***3932—திரு ப. அரசன்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கல்லணைக் கால்வாய்ப் பாசனத்திலிருந்து பருவமழைக் காலங்களில் வீணாகும் வெள்ளநீர் கருங்காடு அணைக்கட்டு, மணலூர் அணைக்கட்டு, கீரனூர் அணைக்கட்டு ஆகியவற்றால் பயன்பெறும் ஏரிகளுக்குப் பாசனத்திற்குத் திருப்பி விடப்படும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

[2002 மே 7

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பரிசீலனையில் இல்லை. ஆனால், ஆய்வில் உள்ளது. சாத்தியக்கூறு இருப்பின் நிதி ஆதாரத்தைப் பொறுத்துப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. ப. அரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'ஒரே கல்லில் இரண்டு மாங்காய்' என்பதைப்போல, இந்தத் திட்டத்தினாலே தண்ணீராலே பயிர்கள் பாழாவதைத் தடுக்க முடியும்; தண்ணீர் இல்லாமல் இருக்கின்ற நிலங்களுக்குப் பாசன வசதியும் செய்துதர முடியும். ஆகவே, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரவர்கள் மீண்டும் மறுபரிசீலனை செய்து ஆய்வில் இருக்கின்ற அந்தத் திட்டத்தை செயலாக்கத்திற்குக் கொண்டு வருவார்களா என்பதை உங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்லணைக் கால்வாய்ப் பாசனத்திலிருந்து பருவமழைக் காலங்களில் வீணாகும் வெள்ளநீரை கருங்காடு அணைக்கட்டு, மணலூர் அணைக்கட்டு, கீரனூர் அணைக்கட்டு ஆகியவற்றால் பயன்பெறும் ஏரிகளுக்கு பாசனத்திற்குப் பயன்பெறும் வகையில் திருப்பி விடும் திட்டம் ஆய்வு நிலையில் உள்ளது. அந்தத் திட்டத்தினுடைய அவசர, அவசியத்தைக் கருதி, நிதிநிலைக்கேற்ப பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ப. அரசன்.

திரு. ப. அரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மூன்று அணைக்கட்டுப் பகுதிகளிலே இருக்கிற நிலங்கள் மழைநீரை நம்பியே உள்ள நிலங்கள். இந்தக் காலங்களிலே மழை பொய்த்துப் போவதை நாம் அறிவோம். ஆகவே, வெள்ள நீரை அந்த அணைக்கட்டுகள் வழியாக ஒரு இலட்சம் ஏக்கர் பாசனம் பெறும் அளவிற்கு அந்தப் பகுதிகளுக்குத் திருப்பி விடுகிற திட்டத்தை மறு ஆய்வு செய்துதர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சரவர்களைக் கேட்டுக்கொண்டு, செய்து தருவார்களா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

2002 மே 7]

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறு ஆய்வு செய்யப்பட்டு, நிதியாதாரத்தைப் பொறுத்து எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 291, திரு. ரா. ஈஸ்வரன், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறை அமைச்சர்.*

291—

சாலையைப் புதுப்பித்தல்

***5131—திரு. ரா. ஈஸ்வரன்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாசுதேவநல்லூர் தொகுதி, தரணி சர்க்கரை ஆலை அருகில் தென்புறம் சுமார் 7 கி.மீ. வரையுள்ள சாலை மிகவும் பழுதடைந்துள்ளதைப் புதுப்பிக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) இல்லை.

திரு. ரா. ஈஸ்வரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தச் சாலை மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டத்தின் மூலமாக 1987-ல் போடப்பட்டது. அதற்குப்பிறகு, இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் ரெகுலராக நெடுஞ்சாலைத் துறையால் எடுத்துக்கொள்ளப்பட்டது. அந்தச் சாலை, தரணி சர்க்கரை ஆலைக்கு அருகில் உள்ளது. விருதுநகர் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களிலுள்ள 8 சட்டமன்றத் தொகுதிகளிலுள்ள கரும்புகள் பூராவும் தினம் 3 ஆயிரம் டன் அந்த வழியாகத்தான் போக வேண்டி இருக்கிறது. ஆகையினால், மாண்புமிகு அமைச்சரவர்கள் மறுபரிசீலனை செய்து அந்த 7 கி.மீ. தூரம் உள்ள சாலையை*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS